IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.301/2020**

**நாள்– 04.10.2023**

**ஜஹான் பீவி**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அனுமதியுடன் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி செங்கோட்டை கிளையில் இருந்து பெறப்பட்ட லேட்.ரஷீம் பெற்று வந்த பணம் குறித்ததற்கான Payment Details Report–ன் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.6 ஆகும். **(இந்த ஆவணம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபிக்கப்படுகிறது).** மேற்படி லேட்.ரஷீம் என்பவர் புளியங்குடி தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்ததற்கான மாற்று சான்றிதழின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.7 ஆகும். மேற்படி லேட்.ரஷீம் என்பவரின் பாஸ்போர்ட்டின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.8 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய மகனின் வயது, வருமானம், வேலை ஆகியவற்றைக் காண்பிக்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 2ன் படி அவருடைய தலைக்காயத்தினால் தான் இறந்திருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய உறவினரான பக்ரூதீன் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைதான் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியாமல் சென்றதால் தான் தலையில் ஏற்பட்ட காயத்தினால் அவர் உயிரிழக்க நேரிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையோ, வரைபடமோ, குற்றப்பத்திரிக்கையோ எங்களுக்கு எதிராக இருக்கிறது என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கவனமாகவும், சாலைவிதிகளை கடைபிடித்தும் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், என்னுடைய மகன் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய மகனுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீட்டில் இருக்கிறது வேண்டுமென்றால் தாக்கல் செய்யலாம். இந்த வழக்கு முடிவதற்குள் என்னுடைய மகனின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய என்னால் முடியும். 3ம் மனுதாரர் இறந்தவரின் தம்பி ஆவார். 3ம் மனுதாரர் இறந்தவருக்கு சட்டப்பூர்வமான வாரிசாகவோ, அவரை சார்ந்து இருப்பவராகவோ வரமாட்டார் என்பதால் 3ம் மனுதாரர் இழப்பீடு கிடைக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல. 3ம் மனுதாரருக்கு திருமணம் முடியவில்லை. நான் இறந்தவரின் வாரிசு என்பதைக் காண்பிப்பதற்கு வாரிசு சான்றிதழைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் அவர் மீதான குற்ற வழக்கை தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வருமானத்தை காண்பிக்கும் வருமான வரிச் சான்றிதழோ, கோழிப்பண்ணை வைத்ததற்கான உரிமமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோழிப்பண்ணை இருந்ததற்கான பதிவுச் சான்றிதழ், உரிமச் சான்றிதழ் போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவர் இருக்கிறார். என்னுடைய கணவர் இந்த கோழிப்பண்ணையை நடத்திக்கொண்டிருக்கிறார். நான் தாக்கல் செய்திருக்கும் விசா 90 நாட்களுக்கு பயன்படுத்தக்கூடிய சுற்றுலா விசா என்றால் சரிதான். எனது மகன் வெளிநாட்டில் வேலைபார்த்தார் என்பதற்கு அந்த கம்பெனியின் நியமனக் கடிதமோ, சம்பளச் சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த கடவுச்சீட்டை என்னுடைய மகன் வெளிநாட்டில் சுற்றுலா

செல்வதற்காக எடுக்கப்பட்டது என்றும், அதை வருமானத்திற்காக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வங்கியில் இருந்து பெறப்பட்டதாகக் கூறும் கணக்கு நகலில் வங்கியின் சீலோ, மேலாளரின் கையெழுத்தோ இல்லாத ஒளிப்பட நகல் என்றால் சரிதான். அந்த ஒளிப்பட நகலிலும், இந்த வருடம் வருமானம் வந்ததற்கான விபரம் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய மகன் 2020ல் இறந்திருக்கிறார் என்றும், அந்த காலத்திற்கான வருமானத்தைக் காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறியிருக்கும் கோழிப்பண்ணை இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அதிக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன விதிகளை மீறியிருப்பதால் இழப்பீடு எதுவும் கிடைக்கவேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.04 18:15:15 +0530